1973 ஏப்ரல் 3]

(இ) ஆமெனில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இத்தகைய பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் இந்த உயர்வித சம்பளம் அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) மாற்றலாகியுள்ள பகுதிகளில், தனியார் உயர்நிலைப் பள்ளித் திட்டத்தின் கீழ் மானியம் பெறும் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு 1960-க்கு முன்பு கொடுக்கப்பட்ட சம்பள விதமும், அரசுப் பணியில் இதற்கு நிகரான பதவிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கிய சம்பள விதமும் ஒரே மாதிரியாக இருந்தன. ஆகவே, மாற்றலாகியுள்ள பகுதிகளில் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1—6—60-லிருந்து முடிவு செய்து திருத்தியமைக்கப்பட்ட சம்பளத்தை அதே பகுதியில் தனியார் துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்குவதென ஏற்றுக்கொண்டது. இத் திருத்தச் சம்பள விதம் மானியம் பெறும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குப் பொருந்தும்படிச் செய்யவில்லை.

Urdu Language Teachers

* 335 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of Urdu Language Teachers serving in the High Schools in our State ; and

(*b*) the number of such Pandits who enjoy Grade I scale of salary ?

உருது மொழி ஆசிரியர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நம் மாநிலத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உருது மொழி ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) அத்தகைய பண்டிதர்களில் எத்தனை பேர் தரம் I-க்கான சம்பள விதம் பெறுகின்றனர் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 63. (இ) 27.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, உருது முன்ஷி முதல் தரம் 27 பேர்கள் இருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் ஓய்வு பெற ஓய்வு பெற,
பி.ப. 4–10 அந்த முதலாவது தர உருது மொழி முன்ஷிகளை இரண்டாவது நிலைக்கு மாற்றி விடுகிறார்கள் என்று அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா? எல்லோரும் முதல் நிலை உருது மொழி முன்ஷிகளாக இருப்பதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் முதல் நிலை உருது மொழி ஆசிரியர்களுடைய எண்ணிக்கை வரவாக் குறைந்து வருகிறது என்பதை அரசு அறியுமா?

Mr. CHAIRMAN : Supplementaries should always be short, Thiru Rajah Iyer.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதல் நிலை உருது மொழி ஆசிரியர்கள் என்று கருதப்படுகிறவர்கள் எண்ணிக்கை குறைந்து அப்படி முதல் நிலையில் இருந்தவர்கள் சிலர் கீழே இறக்கப்பட்டதாக விண்ணப்பங்கள் வந்தன. ஏற்கெனவே இருந்தவர்களாக இருந்தால், இறக்க வேண்டாம் என்று பரிசீலிக்கக் கூறப்பட்டிருக்கிறது. முதல் நிலை என்று கருதப்பட்டவர்கள் அந்த இரண்டாம் நிலையில் இருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் எப்படி முதல் நிலைக்கு உயர்த்தப்படுகிற நிலைக்கு வந்திருக்கிறதோ, அதே மாதிரி கவனிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்து, 2,000 பேர்களும், அதற்குப் பிறகு 260 பேர் இரண்டாவது நிலையிலிருந்தாலும் முதல் நிலைத் தகுதி பெற்றிருக்கிற காரணத்தினால் முதல்நிலைத் தமிழாசிரியர்களாக ஆக்கலாமென்ற முடிவிற்கினங்க, இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

Keerampoor Town Panchayat

* 336 *Q.*—Thiru V. ISVARMURTI (on behalf of Thiru Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Keerampoor Town Panchayat was previously within the jurisdiction of Thuraiyoor Range, Tiruchirappalli district;

(*b*) if so, the reason for the taking out that Town Panchayat from Thuraiyur;